**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8074728

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : திருவண்ணாமலை PS காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு Year ஆண்டு: 2023 FIR No. மு.த.அ. எண்: 04/2023 Date நாள்: 28.04.2023

2. (i) Act சட்டம்: Indian Penal Code — Sections பிரிவுகள்: 120(B), 167, 420, 409,
(ii) Act சட்டம்: The Prevention of Corruption Act — Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c)
(iii) Act சட்டம்: 1988 as amended by the Prevention of Corruption [Amendment] Act, 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 2016 — Date to : நாள் வரை 2018
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.03.2022 — Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 70 கி.மீ. வடகிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி — சீயமங்கலம் (ம) மஞ்சப்பட்டு கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தருபவர் பெயர் — E.அருண் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — ஏழுமலை
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — --- — (d) Nationality : நாட்டினம் — இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் — ---
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — --- — (g) Address : முகவரி — 369,மாரியம்மன் கோவில் தெரு, சீயமங்கலம் (ம) மஞ்சப்பட்டு கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் வரிசை எண் 1 முதல் 4 வரை தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**மேண்மைமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு படி.**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :</u>

புகார்தாரர் E.அருண், த/பெ ஏழுமலை, 369,மாரியம்மன் கோவில் தெரு, சீயமங்கலம் (ம) மஞ்சப்பட்டு கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவரின் 18.03.2022 நாளிட்ட புகார் மனு மீது நடவடிக்கை எடுக்க வேண்டி, முதல் தகவல் அறிக்கை பதிய அறிவுறுத்தி, இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களின் 18.04.2023 நாளிட்ட கடிதம் கிடைக்கப்பெற்றது. அக்கடிதத்துடன் மேற்படி புகார்தாரர் E.அருண் என்பவரின் புகார் மனு. புகார் மனு மீது முதல் தகவல் அறிக்கை பதிய அறிவுறுத்தி சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.Crl.O.P.No.7423/2022-ன் 16.09.2022 நாளிட்ட உத்தரவு மற்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ள அலுவலர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிய அறிவுறுத்தி சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.

(தொடர்ச்சி பக்கம் -4)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P. Anbalagan Rank Inspector of Police, VXAC, Cud. to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) (signature) 28/4/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.4.23 @ 15.45 hrs

Name: பெயர் N. DEVANATHAN
Rank: நிலை ADSP No. எண் VXAC Cud.

பக்கம் 1–ன் தொடர்ச்சி

கடலூர் ஊ.த.க.பிரிவு குற்ற எண். 04/2023–ல் பக்கம் 1 வரிசை எண்.7–ல் கூறியுள்ள குற்றம் சாட்டப்பட்டவர்களின் வரிசை எண் 1 முதல் 4 வரை விவர தனித்தாள் :

1) N.ராஜன்பாபு, வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி), வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். (முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி), தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்)

2) A.ஸ்ரீதர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி), வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். (முன்னாள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்)

3) P.வெங்கடேசன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு), அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். (முன்னாள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்).

4) P.சங்கர், ஊராட்சி செயலாளர், சீயமங்கலம் கிராம ஊராட்சி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம்.

Crl.O.P.No.7423/2022–ன் 16.09.2022 நாளிட்ட உத்தரவு மற்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ள அலுவலர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிய சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பிரிவு 17(A)(1) ஊழல் தடுப்பு சட்டம் 1988, ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 கீழ் உரிய முன் அனுமதி 03.02.2023 மற்றும் 06.02.2023 நாளிட்ட கடிதங்கள் பெறப்பட்டுள்ளது.

புகார் மனுவில் குற்றஞ்சாட்டிப்பட்டுள்ள (1) N.ராஜன்பாபு, வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி), வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். (முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி), தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்), (2) A.ஸ்ரீதர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி), வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். (முன்னாள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்), (3) P.வெங்கடேசன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு), அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். (முன்னாள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்). (4) P.சங்கர், ஊராட்சி செயலாளர், சீயமங்கலம் கிராம ஊராட்சி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம் ஆகியோர்கள் பிரிவு 2(C) ஊழல் தடுப்பு சட்டம் 1988, ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி பொது ஊழியர்கள் ஆவர்.

புகார்தாரர் E.அருண் என்பவரின் புகார் மனுவில் உள்ள விவரம் பின்வருமாறு ; நாள் .18.03.2022, விடுநர் : E.அருண், த/பெ. எழுமலை, 369,மாரியம்மன் கோவில் தெரு, சீயமங்கலம் (ம) மஞ்சப்பட்டு கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் – 604 501, பெறுநர் : உயர்திரு.காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, க.எண்.164,தென்றல் நகர், வேங்கிக்கால், திருவண்ணாமலை–606604– அய்யா வணக்கம், நான் மேற்கண்ட முகவரியில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். இந்நிலையில் தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சீயமங்கலம் (ம) மஞ்சப்பட்டு கிராமத்தில் பாரத பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தில் (2016–2017)

பயனாளியின் பெயர் மூர்த்தி த/பெ. சின்னப்பையன் (Reg No. TN-1850174) என்பவருக்கு வீடு வழங்கப்பட்டுள்ளது. இந்த பாரத பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தில் (PMAY) மேற்கண்ட சீயமங்கலம் (ம) மஞ்சப்பட்டு கிராமத்தில் வசிக்கும் மூர்த்தி த/பெ. சின்னய்யா என்பவருக்கு முறைகேடாக தெள்ளார் ஊராட்சி துணை ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வந்த திரு.ப.வெங்கடேசன், மற்றும் ஊராட்சி செயலாளர் திரு.பி.சங்கர், வட்டார வளர்ச்சி அலுவலராக (கிராம ஊராட்சி) பணிபுரிந்து வந்த ந.ராஜன் பாபு, துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வந்த அ.ஸ்ரீதர் ஆகியோர்கள் கூட்டாக அரசை ஏமாற்றி கையூட்டு பெற்றுக் கொண்டு , மேற்கண்ட (PMAY) திட்டத்தில் ஒரே நபருக்கு இரண்டு வீடுகள் வழங்கி, அரசு நிதியினை முறைகேடு செய்து, அரசுக்கு நிதியினை இழப்பீடு செய்துள்ளனர். மேலும் மேற்கண்ட (PMAY) திட்டத்தில் (2017–2018) உண்மையான பயனாளியின் பெயர் சின்னப்பையன் த/பெ கட்டையன் என்பவராவார். இவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டினை (Reg No. TN-1850174) மேற்கண்ட சீயமங்கலம் (ம) மஞ்சப்பட்டு கிராமத்தை சேர்ந்த மூர்த்தி த/பெ சின்னப்பா என்பவருக்கு, தெள்ளார் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி செயலாளர் ஆகியோர் கூட்டுச்சதி செய்து, பட்டியலில் பெயரே இல்லாத மூர்த்தி த/பெ சின்னய்யா என்பவருக்கு வீடு வழங்கி அரசு நிதியினை முறைகேடாக பெற்றும் அரசினை ஏமாற்றியும் சதி செய்துள்ளனர். மேலும் மூர்த்தி த/பெ சின்னய்யா என்பவர் (PMAY) திட்டத்தில் பயனாளியாக இல்லாமல் வேறு நபர்களின் பெயரில் (PMAY) திட்டத்தில் மேற்கண்ட அதிகாரிகளின் துணையோடு முறைகேடு செய்து அரசிற்கும் பெரும் நிதி இழப்பை செய்துள்ளனர். மேலும் மூர்த்தி த/பெ சின்னய்யா என்பவர் முறைகேடாக (PMAY) திட்டத்தில் கட்டியுள்ள இடத்திற்கு பட்டா இல்லை. மேலும் இரண்டு வீடுகள் முறைகேடாக கட்டியும் இன்னும் முழுமையடையாமல் உள்ளது. ஆனால் அந்த (PMAY) திட்டத்தின் வீடுகளுக்கு பணம் SBI A/c –30283011062 வங்கிக் கணக்கில் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது. எனவே ஐயா அவர்கள் மூர்த்தி த/பெ சின்னய்யா என்பவர் சீயமங்கலம் (ம) மஞ்சப்பட்டு கிராமத்தில் (PMAY) திட்டத்தில் பயனாளியாக

இல்லாத போது தெள்ளார் ஊராட்சி துணை ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வந்த திரு.ப.வெங்கடேசன் மற்றும் ஊராட்சி செயலாளர் திரு.பி.சங்கர் வட்டார வளர்ச்சி அலுவலராக ( கிராம ஊராட்சி) பணிபுரிந்து வந்த ந.ராஜன் பாபு, துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வந்த அ.ஸ்ரீதர் ஆகியோர்கள் கூட்டாக சதி செய்தும், கையூட்டு பெற்று, வீடு வழங்கி அரசை ஏமாற்றி சட்ட விரோதமாக இலாபம் அடைந்துள்ளதற்கு நடவடிக்கை எடுத்து, குற்ற வழக்கு பதிவு செய்ய வேண்டுமாய் தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம் ---------) (E.அருண்) என உள்ளது.

சமர்ப்பிக்கப்பட்டது, புகார்தாரரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை குறித்து முதற்கட்டமாக விசாரித்த வகையில், PMAY திட்டத்தின் கீழ் மூர்த்தி த/பெ சின்னபையன் என்பவருக்கு பதிலாக மூர்த்தி த/பெ சின்னையா என்பவருக்கும், சின்னையன் த/பெ கட்டையன் என்பவருக்கு பதிலாக சின்னையா த/பெ பொன்னன் என்பவருக்கும் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்த வகையில், குற்ற அலுவலர்கள் 1) N.ராஜன்பாபு, வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி), வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். (முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி), தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்), 2) A.ஸ்ரீதர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி), வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். (முன்னாள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், தெள்ளூர் ஊராட்சி ஒன்றியம்), 3) P.வெங்கடேசன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு), அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். (முன்னாள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்). 4) P.சங்கர், ஊராட்சி செயலாளர், சீயமங்கலம் கிராம ஊராட்சி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம் ஆகியோர்கள் மீது இன்று 28.04.2023 ஆம் தேதி 15.30 மணிக்கு திருவண்ணாமலை, ஊ.த.க. பிரிவு குற்ற எண். 04/2023 சட்ட பிரிவுகள் 120(B), 167, 420, 409 of IPC and 13(2) r/w 13(1) (C) of the Prevention of Corruption Act, 1988

T5. [signature]

as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கு பதிவு செய்தேன். மேலும் உத்திரவுபடி வழக்கு கோப்பினை மேல் நடவடிக்கைகாக கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் P.அன்பழகன் வசம் ஒப்படைத்தேன். இதன் அசலை புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvannamalai அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் சமர்ப்பிக்கிறேன். [மேண்மைமிகு உயர்நீதிமன்ற உத்தரவுபடி].

T5. [signature] 28/4/23

ADSP, VAC, Cud.